**R 4771 (page 67)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்

## "BE AT PEACE AMONGST YOURSELVES"

### 1 தெசலோனிக்கேயர் 5:13

நம்முடைய இந்த நாட்களில் பரவலாய் அதிருப்தியானது நிலவிவருவதினாலும் மற்றும் உலகத்தாராயிராத தேவனுடைய பிள்ளைகளானவர்கள் உலகத்தில் காணப்பட்டு, அதினால் தாக்கத்திற்குள்ளாகுகின்றபடியினாலும் - ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும், தினந்தோறும்

**R4772 : page 68**

தனது சரீரத்தைக் கீழ்ப்படுத்தி வைப்பதற்கும், முறுமுறுக்காமல் தனது நாவை காத்துக்கொள்வதற்கும், தனது இருதயத்தை அதிருப்தியிலிருந்து விலக்கிக் காத்துக்கொள்வதற்கும், தேவனால் நமக்குப் பாராட்டப்பட்டதான அவருடைய நன்மைகள் யாவற்றையும் உணர்ந்து, தேவனுக்கான நன்றியுணர்வில் இருதயங்களானது நிரம்பிக் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்வதற்கும் விழிப்பாயிருப்பது என்பது மிகவும் அவசியமாகுகின்றது.

இன்னுமாக இந்தச் சுவிசேஷ யுகத்தில் கர்த்தரால் அழைத்து, இழுக்கப்படுகின்றதான பாத்திரங்களானவர்கள், அனைவரும் உறுதியானவர்களாக - பலமான பாத்திரங்களாகக் காணப்பட வேண்டும். இத்தகையவர்களையே தேவன் தம்முடைய குமாரனுடைய மணவாட்டிகளாகவும், உடன்சுதந்தரர்களாகவும் காணப்படும்படிக்கு நாடுகின்றார். இவர்களது உறுதியும், திடமும், மற்றவர்களுடைய அசட்டையான மற்றும் அலட்சியமான தன்மையிலிருந்து வேறுபட்டதாய்க் காணப்படுகின்றது. இவர்களது பெலவீனங்களானது சுதந்தரிக்கப்பட்டவைகளாக இருப்பினும், மற்றவர்களுக்குக் காணப்படுவதுபோலவே, அதிகமாகவே காணப்படுகின்றது. ஆகையால் இவர்களில் அநேகர் ஒன்றுகூடப்பண்ணப்படும்போது, அதாவது வேதாகம ஆராய்ச்சி வகுப்பிற்குக் கூடிவருகையில், ஒருவருக்கொருவர் மிகுந்த பொறுமையுடன்கூடிய சகிப்புத்தன்மையைப் பெற்றிருக்கும் அவசியமுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். ஒருவேளை கருத்துவேறுபாடுகளும், கருத்து மோதல்களும் ஏற்படுகையில், இவர்கள் ஒருவருக்கொருவர் உண்டுபண்ணிடும் பாதிப்பானது, பலம் குறைந்த குணமுடைய, உறுதி குறைந்த, ஸ்திரமற்ற தன்மையுடைய ஜனங்கள் மத்தியில் ஏற்படுவதைக் காட்டிலும் நிச்சயமாகவே அதிகமாயிருக்கும். இதனாலேயே இவர்கள், "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகள், உண்மையாய் இருப்பதை அறிந்து கொள்கின்றனர்.

ஆகையால் இவ்வகுப்பார் சத்தியத்தோடுகூட, சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின், சாந்தத்தின், பொறுமையின், நீடிய பொறுமையின், சகோதர சிநேகத்தின், அன்பின் ஆவியையும் பெற்றிருக்க வேண்டுமெனத் தேவன் கூறுகின்றார்; இவை இல்லையெனில் மோசமான பிணக்குகளும், பாதிப்புகளும் ஏற்படும்.

வேதமாணவர்கள் அடங்கியுள்ள எந்தவொரு சபையில், வேதாகம பாடங்களானது (volumes) புறக்கணிக்கப்படுகின்றதோ, அங்குப் பெலவீனமும், உலகப்பிரகாரமான போக்கும், சுகபோகப் பிரியமும், கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியக் குறைவு முதலானவைகள் நிச்சயமாய் வெளிப்படும். ஒருவேளை வேதாகம பாடங்களானது நடத்தப்பட்டும், ஆனால் அவைகள் இருதயத்திலும், ஜீவியத்திலும் அப்பியாசப்படுத்தப்படவில்லையெனில், ஆவியின் கனிகளாகிய - சாந்தம், தயவு முதலானவைகள் குறைவுப்பட்டுக் காணப்படும். புதுச்சிருஷ்டியினுடைய குணலட்சணத்தினை வளமாக்கிடத்தக்கதாக, மற்ற ஆவியின் கனிகளானது வளர்வதற்குரிய மண்ணிற்கான அஸ்திபாரமென அறிவின் ஒவ்வொரு அம்சமானது, பயன்படுத்தப்பட வேண்டும்.

தங்களுக்கான ஊழியக்காரர்களாய், மூப்பர்களாய் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, தங்களது "அதிகாரிகளாக" அங்கீகரித்திடக்கூடாது என்றும், தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுவதற்குரிய எந்தப் பிரயாசங்களுக்கும் உடன்படக்கூடாது என்றும், சபையாருடைய கவனத்திற்கு நாம் கொண்டுவந்த தருணங்கள்

இருக்கின்றன (1 பேதுரு 5:3). இன்னொரு பக்கத்தில் அங்கத்தினர்கள் சிலரைத் தவறான மனோநிலையினைக் கொள்வதற்கு வழிநடத்தத்தக்கதாக, குற்றம் கண்டுபிடிக்கும் ஆவியானது சபையாரால் உண்டுபண்ணப்படலாம் எனும் உண்மையினிடத்திற்கும் விசேஷித்த கவனத்தைக் கொண்டு வந்திடுவதற்கு நாம் விரும்புகின்றோம். சபையார் மூப்பர்களை இறுமாப்பாய் ஆதிக்கம் பண்ணுவார்களானால், அது கர்த்தருடைய ஆவிக்கு முரணானதாகவே காணப்படும். அவர்கள் அன்புகூரப்பட வேண்டும், ஆதரிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் சில அபூரணங்களைப் பெற்றிருக்கையில், அவர்களும் மற்ற மனுஷர்கள் போலவே அனுதாபம்கொள்ளப்படுவதற்கும், மன்னிக்கப்படுவதற்கும் மற்றும் பழியினை நிவர்த்திப்பண்ண பெறுவதற்கும் பாத்திரமானவர்களாகவே காணப்படுகின்றனர்.

எந்தளவுக்கு மந்தைக்கான ஊழியத்தில் மூப்பர்கள் அல்லது ஊழியக்காரர்கள் உண்மையாகவும், தாழ்மையாகவும், கடுமையான முயற்சி செய்கிறவர்களாகவும் காணப்படுகின்றார்களோ, அவ்வளவாய் அவர்கள் சபையின் ஒவ்வொரு அங்கத்தினனுடைய இருதயப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்கின்றவர்களாய்க் காணப்படுவார்கள்.

உலகத்திலுள்ள சில ஜனங்களைப் போன்று, தேவனுடைய ஜனங்களில் சிலர் சில முக்கியத்துவமற்றக் காரியங்களைக் குறைக்கண்டுபிடிக்கும் கண்ணோட்டத்துடன் காண்கின்றனர்; உதாரணத்திற்குக் கூட்டங்கள் தொடர்புடைய விஷயங்களில், பாராளுமன்றத்தில் பயன்படுத்துவது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துதல் தொடர்பாகும். வேதாகமமானது எந்தக் குறிப்பிட்ட பாராளுமன்ற சட்டங்களை முன்வைத்திடாமல், தேவனுடைய ஜனங்களுக்கு, சபைக்கடுத்த காரியங்கள் அனைத்திலும், அவர்கள் ஒவ்வொருவரையும் நிர்வகிக்கிற ஒரு பரந்த, பொதுவான பிரமாணத்தையே கொடுத்திருக்கின்றார். இந்தப் பிரமாணத்தினை ஆண்டவர் சுருக்கமான வார்த்தைகளில், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறியுள்ளார் (யோவான் 13:34).

இந்த அன்பின் பிரமாணமானது, தேவனுடைய பிள்ளைகளென நமக்கிருக்கும் எல்லா உறவுகளையும் சீர்த்தூக்கிப் பார்த்திடுவதாக; நாம் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்களில் ஒருவராகவோ அல்லது தெரிந்தெடுக்கப்படாதவர்களாகவோ இருப்பினும், அன்பின் பிரமாணமானது, நம்முடைய ஒவ்வொரு கிரியைகளையும், நம்முடைய ஒவ்வொரு வார்த்தைகளையும் - ஆம் நம்முடைய ஒவ்வொரு எண்ணங்களையும் சீர்த்தூக்கிப் பார்த்திடுவதாக. அருமையான சகோதரரே நம் அனைவராலும் இப்பிரமாணத்தினைத் தொடர்ந்து மனதில் நிலைநிறுத்திக்கொள்ள முடியுமானால், அது அநேகமான பிணக்குகளையும், மனஸ்தாபங்களையும் மற்றும் வலிகளையும் தவிர்த்துவிடும். அது நம்மை அதிகமாய் நமது ஸ்தோத்திரத்திற்குரிய ஆண்டவர் போன்றாக்கிடும் மற்றும் ஒருவர் இன்னொருவரின் முன்னிலையிலும், உலகத்தாரின் முன்னிலையிலும் அவரைச் சிறந்த விதத்தில் பிரதிபலிக்கிறவர்களாக்கிடும். அது நாம் செய்கிற அனைத்திலும் முடிந்தமட்டும் ஜாக்கிரதையாயும், ஒழுங்காகவும் நம்மைக் காணப்படச் செய்து, மற்றும் நம்முடைய நடத்தையில் மற்றவர்கள் சரியான வழியின் அழகினைக் கவனித்து, கற்றுக்கொள்வது வரையிலும், மற்றவர்களிடம் அன்பாய் அதிகம் நாம் எதிர்ப்பார்க்காமல் காணப்படச் செய்யும். பெரும்பான்மையானவர்களின் விருப்பமாக/சித்தமாக விளங்கி, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்தவொரு வழிமுறையிலும் நாம் திருப்திக் கொள்வோமாக. பெரும்பான்மையானவர்கள் நம்மைவிட ஞானம் குறைவானவர்களாய் இருப்பதாக நாம் கருதுவோமானால், அவர்கள் தங்கள் நடவடிக்கையினுடைய தவற்றை உணர்ந்து, அதைச் சரிசெய்வது வரையிலும் கர்த்தர் பொறுமையோடு காத்திருப்பதுபோன்று, நாமும் பொறுமையாய் இருக்கவும், காத்திருக்கவும் கற்றுக்கொள்வோமாக. சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில், நாம் அதிகமதிகமாய்ச் சமாதானம்பண்ணுகிறவர்களாகிவிடுவதற்கு நாடிடுவோமாக: "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9).

---

See more Books & Articles at www.foodfornewcreature.com